செய்தி வெளியீடு எண்: 546 நாள் : 28.10.2014

# செய்திக் குறிப்பு

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஊரக வளர்ச்சித் துறையின் நடவடிக்கைகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை காரணமாக ஊராட்சிகளில் ஏற்பட்ட ஊராட்சி சாலைகள், பாலங்கள் உள்ளிட்ட பாதிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (28.10.2014) ஊரக வளர்ச்சித் துறையின் நடவடிக்கைகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை காரணமாக ஊராட்சிகளில் ஏற்பட்ட பாதிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்து தலைமைச்செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 79,394 குக்கிராமங்களை உள்ளடக்கிய 385 ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் அது குறித்து எடுக்கப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள். மேலும், ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் உள்ள நீரை வெளியேற்ற உடனடி நடவடிக்கைகள் எடுக்கவும், பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களை

சீரமைக்கவும், அறிவுரை வழங்கினார்கள். மழையின் காரணமாக காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் இருக்க ஊரகப் பகுதிகளை சுத்தப்படுத்தவும், கொசு மருந்துகள் தெளித்தல் போன்ற நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், சுகாதார நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட 20 தற்காலிகப் பணியாளர்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்கள். இந்நிலையில், கிராம ஊராட்சிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளை முறையாக சுத்தப்படுத்தவும், குளோரின், மாத்திரைகள், பிளீச்சிங் பவுடர் போன்றவற்றை தேவையான அளவில் இருப்பு வைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்கள்.

மழையின் காரணமாக ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகளில் உடைப்பு ஏற்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறும், மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் தொடர்ந்து மின்சாரம் மற்றும் குடிநீர் கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.N.S. பழனியப்பன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

– – – – –

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**